**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

**P102 உரைநடையும் நாடகமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. உரை முன்னோடி எனக் குறிக்கப் பெறுபவர் யார்?
2. சிலப்பதிகாரத்தில் உரைநடை எவ்வாறு குறிக்கப்பெற்றுள்ளது?
3. இராமலிங்க அடிகளாரின் உரைநடை நூல்கள் யாவை?
4. இரா.பி. சேதுப்பிள்ளை எந்த நூலுக்காக சாகித்திய அகாடமி பரிசு பெற்றார்?
5. பழந்தமிழ் நூல்கள் சுட்டும் தமிழ் நாடக இலக்கண நூல்கள் யாவை?
6. இராஜராஜன் பிறந்த நாளன்று நடித்துக் காட்டப்பட்ட நாடகங்களின் பெயரினை எழுதுக.
7. இசைப்பாட்டு வடிவத்தில் உள்ள தமிழ்நாடகங்கள் இரண்டினை எழுதுக.
8. பம்மல் சம்பந்த முதலியார் நிறுவிய நாடக சபையின் பெயர் என்ன?
9. கண்ணதாசன் எழுதிய உரைநடை நூல்கள் இரண்டினைக் கூறுக.
10. மு. வரதராசனார் வகித்த பதவிகளில் இரண்டினைக் கூறுக.
11. வள்ளி திருமண நாடகத்தில் வள்ளி பறவைகளை ஏன் விரட்டுகிறாள்?
12. கோவி. மணிசேகரின் படைப்புகளில் உள்ளடக்கம் எவ்வாறு அமைந்திருக்கிறது?
13. தேச விடுதலையைக் கருவாகக் கொண்ட நாடகங்கள் யாவை?
14. காசி விசுவநாத முதலியாரின் மூன்று நாடகங்களின் பெயரினை எழுதுக.
15. தொடர் நாடகத்தை எதனுடன் ஒப்பிடலாம்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. உரையின் பயன்கள் யாவை?
2. அடியார்க்கு நல்லார் உரையின் சிறப்புகளை எழுதுக.
3. பாவாணர் உரைநடையின் தனிச்சிறப்பு என்ன?
4. மொழிக் கலப்பு என்றால் என்ன?
5. புராண நாடகங்கள் ஐந்தின் பெயரை எழுதுக.
6. நாடகத் தலைப்பு எவ்வாறு வைக்கப்படுகிறது?
7. வானொலி நாடக நிகழ்ச்சிகளின் குறிக்கோள்கள் யாவை?
8. அரசு தொலைக்காட்சிகளில் நடிகர்களை எப்படித் தரம் பிரிக்கிறார்கள்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) அறிஞர் அண்ணாவின் உரைநடைச் சிறப்பினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) மறைமலையடிகள் உரைநடைக்குச் செய்த தொண்டினை விளக்குக.

2. (அ) ஆ.பெ. சுந்தரம் பிள்ளையின் மனோன்மணிய நாடகப் பாத்திரங்களின் செயல்பாட்டினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) உரைநடை வளர்ச்சியில் கண்ணதாசனின் பங்கினை விளக்குக.

3. (அ) தொலைக்காட்சி நாடகங்களில் இன்றைய போக்கினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகத் தொண்டைப் புலப்படுத்துக.

❋ ❋ ❋